முத்துக்கமலம்

# இணைய இதழ் வழங்கும்

# மின் புத்தகம்

# பாராயண இராமாயணம்



## " வரத நம்பி " இளநகர் காஞ்சிநாதன்





**முத்துக்கமலம் இணைய இதழ்**

19/1, சுகதேவ் தெரு, பழனிசெட்டிபட்டி,தேனி - 625 531

தமிழ்நாடு, இந்தியா.

முத்துக்கமலம் மின் புத்தகம்
இணையத்தில் ஒரு இலக்கியப் படைப்பு! இது தமிழ் ஆர்வலர்களின் இலக்கியத் துடிப்பு!!

## மின் புத்தக விபரம்



- மின் புத்தகத்தின் பெயர் : பாராயண இராமாயணம்
- ஆசிரியர் : "வரத நம்பி" இளநகர் காஞ்சிநாதன்
- பொருள் : ஆன்மீகம் – இந்து மதம்.
- பக்கங்கள் : 9
- காப்புரிமை : ஆசிரியருக்கு
- வடிவமைப்பு : தேனி.எம்.சுப்பிரமணி
- விலை : இலவசம்
- வெளியீடு : முத்துக்கமலம் இணைய இதழ்

19/1, சுகதேவ் தெரு,
பழனிசெட்டிபட்டி,
தேனி – 625 531.
தமிழ்நாடு, இந்தியா.
இணைய முகவரி: www.muthukamalam.com
மின்னஞ்சல்: msmuthukamalam@yahoo.co.in



# ஆசிரியர் உரை



எளிய வடிவ தமிழில் எத்தனையோ இராமாயணக் காவியம் வந்திருந்தாலும் இதை படிக்கும் போது ஒரு ஆத்ம திருப்தி ஏற்படுகிறது. எனவே இதை புத்தக வடிவாக அச்சில் கொண்டு வரவேண்டும் என்ற ஆவலை திரு. ஆக்கூர் நரசிம்மராகவன், திரு.கே.வாசுதேவன், திரு.இராமமூர்த்தி மற்றும் திரு.நடராஜன் அவர்களும் எடுத்துக்கொண்ட பெரும் முயற்சியையும் மற்றைய நண்பர்கள் இதற்கு பூரண ஒத்துழைப்பை நல்கியதும் என்னால் என்றும் மறக்க இயலாது.

இந்த பாராயண இராமயணம் என்னும் சிறுநூலை எழுதத் தூண்டிய விதமும் இதற்கு அமோக வரவேற்பை நல்கிய என்னுடன் பணிபுரியும் இந்துப் பத்திரிகை நண்பர்களுக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த சிறுநூலை மின்புத்தகமாக்கி உலகத் தமிழர்களிடத்தில் கொண்டு செல்ல உதவிய முத்துக்கமலம் இணைய இதழுக்கும் என் இதயப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சிறு நூலை என்னை இந்த உலகிற்கு அறிமுகம் செய்த என் தாய் தந்தையர் திருவடிகளுக்கு காணிக்கையாய் சமர்ப்பிக்கிறேன்.

இந்த சிறு நூலுக்கு ஆசிகள் வழங்கிய ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் அவர்களுக்கும் என் நன்றியையும் பணிவான வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.


**- "வரத நம்பி" இளநகர் காஞ்சிநாதன்**

பிரகாஷ் பிளாட்ஸ்,<br>
புதிய எண்: 14 பழைய எண்:26,<br>
கிரி தெரு, மேற்கு மாம்பலம்,<br>
சென்னை–600033.<br>
தொலைபேசி: 044-24742282<br>
அலைபேசி:9840955363.<br>
**மின்னஞ்சல்: elanagarkanchinathan@yahoo.co.in**

# பாராயண இராமாயணம்



அழகு தமிழ் பழகு கவி பெருக தரும் பரம்பொருளே
உழுத கவி தமிழில் வர விளைந்த நலம் திருவருளே
தொழுத கரம் அமுதமெனும் கடலில் விழ நனைந்தேனே
எழுதவரம் கொடுத் துனது கழலடியில் பணிந்தேனே! 1

பணியவரும் பயனிதுவே பாரில் உள்ளோர் புகலாரோ
அணிமடந்தை விரிந்தகுழல் நாயகியின் துணையோடு
கனியவந்த கவிதையிதை காலைமுதல் மாலைவரை
இனியதுவாய் ஓதநலம் பெருகும் நிலை பாரீரோ! 2

பாரளந்த பரந்தாமன் தயரதனின் மகனாய்
தான்விரும்பி பிறந்தானே பசுந்தளிரின் வடிவாய்
கோசலையின் மணிவயிறு செய்ததொரு பாக்கியமோ
பேசவொரு வாய்ப்பளித்த பெரியகதை கேளீரோ! 3

கேளீரோ இராமன்கதை இவ்வுலகில் மிகவெளிது
தாளிரண்டில் சரணடைந்து சித்தசுத்தி பெறலாம்
மீளாத துயரமதும் வந்துவந்து வாட்டிடுமோ
தாளாத சோகமதை துடைக்க வந்த அவதாரம்! 4

அவதாரம் பலசெய்யும் அண்ணலவன் மன்னனவன்
ஒருதாரம் உய்யும்வகை காட்டிடவே அலைகடலை
விட்டிறங்கி மண்ணுலகை பேண வந்தான் நமக்காய்
கிட்டியதோர் பாக்கியமே மானிடரே மனிதனென! 5

மனிதனென நாட்டியதோர் செய்கையிலே பவனிவர
தனியொழுக்கம் செப்பவந்த செம்மலவன் இராமனென
இமைப்பொழுதும் சொல்லிட வோர் இடர் களையும்
சுமைகுறையும் சுகம்பெருக நல்லவரின் துயர்தீரும்! 6

தீர்ப்பதற்கே வடிவெடுத்தான் செங்கதிரோன் குலத்தில்
வார்த்தெடுத்த சிலைப்போல தோன்றியவன் புவியில்
திருவரங்கப் பெருமானின் மறுவடிவில் நடந்தான்
வருவோர்க்கு வந்திறங்கும் வள்ளல் இவன்குலவிளக்கே! **7**

விளக்கொளியில் வெங்கதிரோன் நாணுதலை செய்தான்
பளிச்சிடுவோன் விழிகண்டு கருமேகம் நுழைந்தான்
வல்லரக்கன் இலங்கைநகர் சாடவொரு அவதாரம்
நல்லமரர் துயர்தீர அயோத்தியில் பிறந்தான்! **8**

பிறந்திடவோர் காரணந்தான் தயரதனை தேர்ந்தெடுத்தான்
அறம்பெருக ஆறெனவே ஆற்றலுடன் அவதரித்தான்
திறம்பெருக மறைமுனிவன் தவவேள்வி மேன்மையுற
சரந்தொடுத்த காரணத்தால் தாடகையும் மரித்தாள்! **9**

மரித்தவுடன் வேள்வியதும் நிறைபெருக மாமுனிவன்
கரம்பிடிக்க தொடர்ந்துவர காலில்பட கல்லைப்பெண்
உருவாக்கி மிதிலைவர குளிர்ந்த பெரும்சோலையிலே
பெரியதொரு வில்வளைத்து மைதிலியை மணம்முடித்தான்! **10**

மணமுடித்த கையோடு இராமனவன் முகமலர
தினவெடுத்த தோள்வென்று மழுவாளி வெற்றிகொண்டு
தவமுழுதும் அடக்கியவன் அணிமாட அயோத்திக்கு
சிவந்ததொரு தாமரையாள் சிலைபோல தொடர்ந்தாள்! **11**

தொடரம்பால் அசுரர்களை துரத்தி யோட்டி
கடமையென அரசாட்சி கொடுக்கும் அந்நேரம்;
கொடியவினை கைகேயி வரத்தால் அந்தோ
நெடியதொரு பதவிதனை இழந்தான் இராமன்! **12**

இராமனவன் கானகந்தான் போகவேண்டும்
பரதனவன் அயோத்தியை ஆளவேண்டும்
தாளாத துயர்கொண்டு தயரதன்; சாய்ந்தான்
கோளான கூனியவள் சொல்லின் வன்மை! **13**

வன்மைதனை பொறுமையென நெஞ்சில்கொண்டு
தண்ணலர்ந்த தாமரைபோல் முகத்தில்சிறந்து
வண்ணமலர் ஆடைகளை துரந்தான் இராமன்
கண்ணெழிலாள் சானகியும் இளையவனும் தொடர்ந்தார்! **14**

தொடரவொரு நாழிகையுள் அயோத்தி எங்கும்
படரவந்த துயரங்கள் இராமனின் பிரிவால்
கதறுகின்ற மக்கள் வெள்ளம் கனிய பார்த்து
சிதறுகின்ற கருமேகம் கானகத்துள் நுழைய! **15**

நுழைந்தவுடன் கானகத்தில் குகனைக் கண்டான்
அகமகிழ்ந்து தோளோடு தழுவி கொண்டான்
தழைஇலைகள் கனியோடு காயை உண்டான்
இணைபிரியா இலக்குவனும் விரதம் பூண்டான் 16

பூண்டதொரு விரதமது நிறைவாய் மாற
ஆண்டவனும் சித்திரக் கூடந் தன்னுள்
மாண்டானே தயரதனும் செய்தி கேட்டு
தூண்டுதலில் நிகழ்ந்த வொரு நிகழ்ச்சியிங்கே! 17

இங்குமங்கும் திரிந்தலைந்த கானகத்துள்
மங்கலநல் சானகியும் இலக்குவண் தானும்
தேனமரும் பொழில்சாரல் சோலை தன்னுள்
மானமுடை பரதனொடு வசிட்டரும் வந்தார் 18

வந்தவர்கள் அணிவகுக்க சுமந்திரரும்
நொந்ததொரு நகரமக்கள் சேனை கொண்டு
அந்தமிலா ஆதியிலா இராமன் தன்னை
பந்தமொடு பிணைப்போடு பாதம் பணிய 19

பணிந்தவுடன் அண்ணனவன் பரதனுக்காக
அணிந்திருந்த மரவடியை ஆறுதலாக
கனிவோடு தந்தானே தேயம் ஆள
இனிதான ஆரணியம் புகுந்துசென்றான் 20

சென்றவுடன் மறைமுனிக்கு வார்த்தை நல்கி
வெங்கண் விறல் விராதனை வில்லால் எய்தி
வண்டமிழன் மாமுனியின் வரிவில் வாங்க
கண்டெழுந்த காமத்தால் சூர்ப்பணகை வந்தாள் 21

வந்தவளோ சீதையவள் அழகில் மயங்கி
தனயனுக்கு பரிசாய்தர அன்னையை நெருங்க
கொடிமூக்கும் காதிரண்டும் இலக்குவன் அரிய
நெடுவரக்கர் கரனோடு தூடனும் மாய்த்தான் 22

மாய்த்தபின் சூர்ப்பணகை இலங்கை வேந்தன்
வாய்த்ததொரு நிலைமைக்கு கேள்வி கேட்க
காய்ந்ததொரு கடுங்கோபம் தலைக்கு ஏற
ஏய்த்தவனின் மனையாளை கவர செய்வான்! 23

செய்யவளின் எழில்தன்மேல் காதல் கொண்டு
பொய்மானின் வடிவாக மாரீச்சன் போக
மேனியெல்லாம் நீறணிந்து யோகி போன்று
தானமென கேட்டவனும் கவர்ந்து சென்றான்! 24

சென்றவனும் தென்னிலங்கை கானகம் தன்னில்
சிறைவைத்து அன்னைதனை வாடச் செய்தான்
மன்னவனும் மாயைகொண்ட மானை வென்றான்
சின்னவனும் பின்செல்ல  தேவியை இழந்தான் **25**

இழந்தவனும் சடாயுவால் சேதியை அறிந்தான்
சிறகிழந்த பறவைக்கு மோட்சம் தந்தான்
கிழிந்ததொரு இதயத்தால் இரவும் பகலும்
வழிநெடுக நடந்தனரே பாமரன் போலே! **26**

பாமரனும் தன்னுயிரும் கானகம் தன்னில்
தாமரையாள் சீதைதனை தேடத் தேட
கணையொன்றில் கவந்தன்தன் உயிரை மாய்த்து
கருணையோடு சபரிதந்த கனியும் உண்டான்! **27**

உண்டதொரு மயக்கத்தில் உலவும் வேளை
கண்டதொரு வனமருவு கவியரசன் நட்பால்
ஏழுமரம் ஓரம்பில் வீழ்த்திக் காட்ட
தாழ்ந்தானே சுக்கீரவன் வாலியை வீழ்த்த! **28**

வீழ்த்தவொரு நாழிகையும் குறிப்பால் உணர்த்தி
ஒருகணையால் வாலியைதான் மறைந்து தாக்கி
கொடுத்ததொரு வாக்கிற்காய் அரசினை அளித்தான்
நெடுந்தவத்தோன் இராமன்இங்கு சீதையை தேட! **29**

தேடுதலுக்கு தூதுவனாய் அனுமனை அமைத்தான்
கூடுதலாய் பலம்பெற்ற அனுமன் தானும்
இராமனவன் சொன்னதொரு வார்த்தை கொண்டு
இலங்கைக்கு பயணம்செய்ய துணிந்தான் நின்று! **30**

நின்றவனும் திறல் அனுமன் கடலைத் தாண்டி
மன்றம்நிறை இலங்கையெனும் நகரந் தன்னுள்
அன்றலர்ந்த தாமரையாள் அன்னையைக் கண்டு
நின்னடியேன் விண்ணப்பம் எனமொழிய கேட்டாள்! **31**

கேட்டவுடன்  அஞ்சனையின் மைந்தன் ஆங்கே
வாட்டமுடன் இருக்கின்ற  அன்னை தமக்கு
காட்டினிலே நடந்தஅந்த நிகழ்ச்சி கூற
காக்கைமுலை தீண்டியதும் உணர்த்திய பின்னே! **32**

பின்னரதன் கண்ஒன்றை பறித்த விதமும்
அன்னமவள் மான்கண்டு மயங்கிய  நிகழ்வும்
சொன்னமொழி கேட்காமல் பிரிந்த கதையும்
இன்னுமொரு அடையாளம் ஈதவன்கை மோதிரமே! **33**

மோதிரத்தை கண்டவுடன் சானகியும் மகிழ்ந்தாள்
ஆதிபிரான் அடையாளம் இதுவெனக் கருதி
சோதிவடிவ நாயகியும் கண்ணீர் மல்க
மாருதியும் விடைபெற்று இலங்கையை எரித்தான்! **34**

எரித்தவுடன் அன்புடனே இராமனை நோக்கி
பறந்துவந்தான் அனுமானும் வான்வழியாக
மெலிந்தவுடல் இராமனுக்கு சேதியை சொல்ல
கனிவுடனே படைதிரட்டி இலங்கை சென்றான்! **35**

சென்றவனோ வீடணற்கு நட்பை தந்தான்
மன்றில்உள்ளோர் அனைவரையும் சேரச்செய்து
கல்கொண்டு அணை கட்டி மறுகரையேறி
வில்கொண்டு விட்டம்பில் அரக்கரை சாய்த்தான்! **36**

சாய்ந்தார்கள் கும்பனொடு நிகும்பன்தானும்
மாய்ந்தார்கள் கும்பகர்ண இந்திர சித்தும்
தோளிருபது இராவணனும் கீழே சாய்ந்தான்
வானவர்கள் மலர்மழையால் வாழ்த்துதல் செய்தார் **37**

செய்தவுடன் கொய்தமலர் சீதையும் பணிய
எய்தியதோர் அரசிருந்து வீடணன் தானும்
இலகுமணி தேரேறி குகனுடன் கூடி
திலகமென விளங்கும் அயோத்தியில் நுழைய **38**

நுழைந்தவுடன் சந்தனமும் அகிலும் சாத்த
தழைத்த மலர் வாசம்பல வண்ணங் கொண்டு
இழைத்த நகைஆபரணம் மாலை அணிந்து
குழல்மலராள் சீதையொடு அரியணை ஏற! **39**

ஏறியதும் காகுத்தன் குடும்பத் தோடு
வாழ்த்தியதில் தீயவையும் சிதறி வோட
தேறியது தேகமதும் பொலிவு பொங்க
மாறியது கவிதைஇங்கு அழகிய தமிழில்! **40**

தமிழெனக்குத் தேப்பெருமான் காதில் சொல்ல
மொழிந்தயிவை நாற்பதுவும் வரதநம்பி
இளநகரான் காஞ்சிநாதன் இயலாய் தந்த
வளமான வாழ்வுக்கு வகைபல செய்யும்! **41**



இது ஒரு முத்துக்கமலம் இணைய இதழின் மின் புத்தகப் படைப்பு

இணையத்தில் ஒரு இலக்கியப் படைப்பு! இது தமிழ் ஆர்வலர்களின் இலக்கியத் துடிப்பு!!

http://www.muthukamalam.com

